# நிர்வாக அறிக்கை
# 2000

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

# நிர்வாக அறிக்கை
# 2000

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

# முகவுரை

புத்தாயிரமாம் ஆண்டின் வெளியிலிருந்து கூட்டுறவு இயக்கம் வந்தபாதையை வரும் வழியை குறிப்பிடும் நிர்வாக அறிக்கை 2000 ஆம் அண்டின் மலரை கூட்டுறவாள மக்களுக்கு மிகவும் சந்தோஷத்துடன் அளிக்கின்றேன். எனது நிர்வாகத்துக்குட்பட்டிருந்த காலத்துக்குள் சமர்ப்பிக்கப்படும் இரண்டாவது அறிக்கை இதுவாக இருந்தாலும், இவ் யுகத்தின் முலாவது அறிக்கையாக இருப்பது ஒரு வகையில் சந்தோஷத்திற்குரிய விடயமாகும். மறுபக்கத்தில் 2000ஆம் ஆண்டில் கூட்டுறவு இயக்கத்துக்கு இன்னுமொரு தடையை குறிப்பிடும் வருடமாதலால், கடந்தவருடத்தை மீளாய்வு செய்து புதிய எதிர்பார்ப்புக்களை வெளிக்கொணரும் அறிக்கையொன்றாக அறிமுகப்படுத்துவது சரியானதாகும்.

நடைமுறையிலுள்ள பொருளாதர முறையில் நிகழும் தொடர்ச்சியான சூழ்நிலைகளை மதிப்பிட்டு அவற்றைப் தாங்கிக்கொண்டு கூட்டுறவு இயக்கம் கடத்திய இவ்வாண்டு எதிர்காலத்துக்கு முகங்கொடுக்கும் தடை வருடமொன்றாக நான் கருதுகின்றேன். உலகெங்கிலும் வியாபாரச் சமூகம் புது யுகத்தினை வெற்றி பெறச் செய்வதற்காக புதுக் கருத்துக்கள் மற்றும்புதிய ஆக்கங்களை வெளிக் கொணரும் போது, கூட்டுறவு இயக்கத்துக்கும் அத்திசையைப் பார்க்காமலிருக்க முடியாது சகல கூட்டுறவுச் சங்கங்களும் புது வருடத்திற்கென ஏதாவதொன்றை செய்ய அல்லது ஏதாவதொன்றைச் சிந்திக்க முனைவது மகிழ்ச்சிக்குரிய ·தொரு காரணமாகும்.

கூட்டுறவு இயக்கத்துக்கு வெற்றி பெற முடிந்தது வியாயபாரத்தில் மாத்திரமல்ல, அங்கத்துவ எதிர்பார்ப்புக்களும் அநேகமானவற்றுக்கு மற்றும் செயல்களில் ஈடுபடுதல், மற்றும் தேடிக்கொடுத்தல், அதைவிட முன்னுரிமை அளிக்கவேண்டியதொரு பணியாயிற்று விவசாயக் கைத்தொழில்களுக்கு கைகொடுத்துதவுதல், சுயதொழில்களுக்கு

கைகொடுத்துதவுதல், அபிவிருத்தித் துறையில் உற்பத்தியாளர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தல். கூட்டுறவு இயக்கத்தின் பிரபல்யாமன எதிர்பார்ப்பாகும். அளவீட்டு வகையில் நோக்கும் பொழுது, அக்குறிப்பிட்ட அங்கத்துவ எதிர்பார்ப்புக்கள் முன்னரைவிட பாரியதொரு மதிப்பினைக் காட்டு கின்றது வியாபாரச் சூழலுக்குள், கூடுதலாக சவால்களுக்குட் பட்டது தீவெங்கிலுமுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாகும். விசேடமாக நடைமுறையிலுள்ள வியாபார அமைப்புக்களைப் பின்பற்றிச் செல்வதில் பலதரப்பட்ட இதற்கு வழிகோலியுள்ளது. நிறுவன சைச் சன்மானத்தை விட சேவைக்கே முதலிடம் வழங்கப்படுவது, கூட்டுறவிலான இயல்பாதலால், தமது எல்லைக்குள் செயலாற்றுவது அதற் குரிய கட்டாயமான இணக்கப்பாடுமாகும். எனினும், கூட்டுறவு இயக்கத்தின் பணியாளர் குழாம் மற்றும் நிறுவனப் பராமரிப்பு போன்ற வறைத் திருப்திகரமாக நடாத்திச் செல்வதற்காக இலாப எதிர்பாகதை மற்றும் சேவை ஆகியவற்றை சமமாகவே கருதப்படல் வேண்டும் என விளங்கிக் கொண்டுள்ளனர். இதற்காக சட்டம், முகாமைத்துவம், கல்வி போன்றதுறைகளை கூடுதலாக நிறுவன அபிவிருத்தியின் பால் ஈடுபடுத்தி செயல்பட்டுவருகிறது.

அச்செயற்பாட்டின் ஒரு கட்டமான இலங்கைக்கூட்டுறவுச் கல்லூரி, தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனமாக உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் சர்வதேச இயக்கங்கள் மற்றும் கூட்டுறவு இயக்கம் அனுபவம் பெற்றுள்ள உயர்தரத்திலான வியாபார நிலைய முறையை கூட்டுறவினூடாக செயற்படுத்தும் முதல் படியாக அரசபங்களிப்பை பெற்றுக்கொடுக்கும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு, அதற்காக அரசிட மிருந்து 1.5 ரூ.ப.லட்சம் வீதம் 08 கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி பெற்றுக்கொடுக்க உடன்பட்டு செயல்படுத்தப்பட்டுவருகிறது. இதற்காக கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் அனுசரனையுடன் கூட்டுறவு முகாமைத்துவச் சேவை நிறுவனம், முகாமைத்துவ ஆலோசனைகளை இத்திணைக்களத்திற்கு பெற்றுக் கொடுத்துள்ளது.

இலங்கை முழுவதிலும் அமைந்துள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 311க்கும் பொதுவாக பாதித்த சிக்கல் நிதி விவகாரத்தை தீர்க்கும் வழிகள் தொடர்பாக, நிரந்தரமாகவே கவனம் செலுத்தப்பட்டதுடன், மேலும் சிறந்த முகாமைத்து வத்துடனான. சங்கங்களைத் தேர்தெடுத்து கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திலிருந்து நிதி வசதிகளைச் செய்து கொடுக்கவும் வகை செயயப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து அங்கத்துவ சமூகம் வெளியாகும் காரணம், அச்சங்கங்கள் மிகப் பிரதான காரணம் எனத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அச் சங்கங்களை திரும்ப அங்கத்த வர்களிடம் ஒப்படைக்க உபாய வழிகளை இனங்காண எனது கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அதற்காக கூட்டுறவுச் சங்கங்கள் மீள நிர்மாணிக்கும் கருத்திட்டமொன்றை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இக் கருத்திட்டத்தின் கீழ் அங்கத்தவரை முதன்மையாகக் கொண்டு ஒரு பகுதி சாதாரண மக்களை கூட்டுற வைச் சூழ வரச் செய்வதும், மற்றும் அவர்களது தேவைகளை நிறைவேற்றும் கூட்டுறவுச் சங்கமொன்றை நிர்மானிக்கும் வல்லமை பற்றி விளக்கமளிப்பதற்கும் அதனுடன் தொடர்புபடுத்துவதற்கும் உபாயமார்க்கமாக உதவிபுரிவதற்கும் இத்திட்டம் நோக்கமாகக் கொண்ட ஒரு படியாகும். அடுத்தவருடத்தில் அத்திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு சிலதை அங்கத்தவர் வசம் ஒப்படைக்க எதிர்பார்க்கப்படுகிறது பல வருடங்களாக அங்கத்த வர்களிடமிருந்து தூரவாகியிருந்த கூட்டுறவை, விசேடமாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை அவர்களின் கையில் ஒப்படைக்க ஆயத்தமாகியிருந்தும் அவர்களுடைய கருத்துக்கள் எவ்வளவு தூரம் அரசியல் சூழ்நிலையில் எவ்வளவு தூரத்திற்கு பாதிப்புக்களை ஏற்படுத்தும் என கருத்திட்டத்தின் எதிர் பார்ப்புக்கள் நிறைவேற்றுவது அல்லது நிறைவேற்றாமை நிகழ முடியும். எவ்வாறாயினும், இலங்கையில் கூட்டுறவை அங்கத்த வர்வசம் ஒப்படைக்காவிடில் சாதாரண அபிவிருத்தியினால் எதிர்பார்ப்புக்களை வைத்திருக்க முடியாது.

பநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் அநேகமானவை தமது சம்பிரதாயபூர்வமான நுகர்ச்சி வியாபாரத்தில் ஈடுபட்டாலும்

மற்றொரு பங்கை அங்கத்தவர்களின் தேவையின் நிமித்தம் வியாபார நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வதற்கு செயல் பட்டுள்ளது. விசேடமாக விவசாய பிரிவின் அக்கைத்தொழில் விவசாயின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த பலதரப்பட்ட கருத்திட்டங்கள் சங்கங்களினால் செயற்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக மத்திய அரசின் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் முழுமையான உதவிகளையும், நிதி அனுசரனைகளையும் பெற்றுக் கொடுக்கும் பணியை சிறப்புற நிறைவேற்றிக் கொடுத்துள்ளது. இவ்வருடத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் நெற்கொள்னவுக்காக, நிதியம் மற்றும் அரச திணைக்கள நிதியம் மூலம் 751.7 மிலியன் ரூபா பெற்றுக் கொடுத்துள்ளதுடன், சங்கங்களின் பங்களிப்புடன், இவ்வருடத்தில் 1073.3 மிலியன் பெறுமதியான 82624 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டது ஒரு விசேட நிகழ்வாகும். இதற்கு முந்திய வருடங்களிலிருந்து அமுல்படுத்தப்பட்டிருந்தவிதை நெல், போசாக்குள்ள அரிசி, அரிசி மா, பெரிய வெங்காய விதைபின் அறுவடைத் தொழில்நுட்ப கருத்திட்டம் போன்றவற்றை மேலும் செயல்படுத்தக் கூடியதாக விருந்தது.

இத்துடன் பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளின் உற்பத்தி வளத்தைமேலும் விருத்தி செய்யும் நோக்கில் அப் பிரிவுக்காக பாலை பரீட்சித்துப் பார்க்கும் 27 இயந்திரங்களை சங்கங்களுக்குப் பெற்றுக் கொடுக்க மிருக வளர்ப்பு மற்றும் சுகாதார அமைச்சுக்களின் உதவியும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்தபால் விற்பனை நிலையங்கள் 115 மூலம் இப் பால் உற்பத்தி சங்கங்களின் உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும் பங்களிப்பைப் பெற்றுகொடுத்துள்ளது.

இவ்வருடத்தில் மீன்பிடித்துறையினை விருத்திசெய்வதற்காக மீன்பிடிச் சங்கங்களுக்கு புது முகச் சாயலை ஒன்றினைச் சேர்த்து மீன்பிடி வங்கிகளை பிரபல்யப்படுத்துவது சந்தோசத் திற்குரியதொரு விடயமாகும். இதுவரை நடைபெற்று வந்த

சங்கங்களை மேலும் வினைத்திறமையுடனான சேவை மற்றும் மீனவ மக்களுக்கு வங்கி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் இவ்வங்கிகளின் நோக்கமாகும்.

கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பாக பாரியதொரு முன்னேற்றம் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தாலும், கல்வி அமைச்சுடன் இணைந்து ஒற்றுமையாக பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களை மறுசீரமைத்து, எதிர்கால கூட்டுறவுத் தலைவர்களையும் மற்றும் நற்பண்புள்ள பிரசைகளையும் சமுகத்திற்கு ஒப்படைக்கும் ஆரம்பகருத்தை முன்வைத்து திட்டங்களத் தயாரிக்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு பாடசாலைப் பிள்ளைகளை அடிப்படையாகக் கொண்ட பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் 78 வதசர்வதேச கூட்டுறவு தின விழாவின் நிமித்தம் நடாத்தப்பட்டது. வெற்றியீட்டிய பாடசாலை மாணவ மாணவியருக்கு பரிசில்களும், கேடயங்களும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு, அவர்களை ஊக்குவிக்கப் படுவதுடன், கல்வி அமைச்சின் இடைவிடாத ஒத்துழைப்பும் இதற்கென கிடைக்கப்பெற்றது.

மாகாண ரீதியிலான ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இரண்டாம் தர சங்கங்களின் செயற்பணி இவ்வருடத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வந்ததுடன், மாகாண ஆணையாளர்களின் அர்ப்பணிப்பையும் இங்கு மறந்து விட முடியாது. கூட்டுறவு இயக்கத்துக்கு இவ்வருடம் ஒரு பக்கத்தில் விசேடமாகக் குறிப்பிட வேண்டியது, இதுவரைகாலமும் டியூக் வீதியில் அமைந்திருந்த பிரதான அலுவலகம் வசதிகளுடன் கூடய இடத்திற்குக் கொண்டு செல்லத் தீர்மானிக்கப்பட்டதாகும். இத்துடன் இதுவரை கூட்டுறவு, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சராக இருந்த திரு. டீ..பீ. விக்கிரமசிங்ஹ அவர்களின் பதவி வெற்றிடமானதன் பின்னர் புதிய அமைச்சராக திரு. எச்.பீ. சேமசிங்ஹ அவர்கள் நியமிக்கப்பட்டதும் இவ்வருடத்தில் நிகழ்ந்தமற்றுமொரு விசேட நிகழ்வெனக் குறிப்பிடமுடியும். கூட்டுறவு இயக்கத்தின் விசேட நிகழ்வுகள் ஒரு சிலதை மாத்திரம் இங்கு குறிப்பிட்டதுடன், முழு விவரங்களடங்கிய தகவல்களை இங்கு காட்டப்பட்டுள்ள அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2000ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை மற்றும் புள்ளிவிவரக் கைநூலை வெளியிட எனக்கு ஒத்துழைப்பு நல்கிய குழுவினருக்கு நன்றி தெரிவிப்பது எனது கடமையெனக் கருதுகின்றேன். தகவல்களை வழங்க ஒத்துழைப்பு நல்கிய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்கள்/ பதிவாளர்கள் முதற் கொண்டு புள்ளிவிவர உத்தியோகத்தர்கள், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் மற்றும் செயலாளரையும் இங்கு விசேடமாக ஞாபகமூட்டுகின்றேன்.

கூட்டுறவு இயக்கத்தின் அபிவிருந்திக்கு அளவிலா ஒத்துழைப்பினைக் அளிக்கும் மக்கள் வங்கி, இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை, கூட்டுறவு முகாமைத்துவ நிறுவனம், கூட்டுறவு பணியாளர் ஆணைக்குழு, தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம், உச்சமட்டக் கூட்டுறவு அமைப்புக்களை உள்ளடக்கிய இலங்கையிலுள்ள சகல கூட்டுறவுச் சங்கங்களையும் மிகவும் நன்றியறிதலுடன் நினைவூட்டுகிறேன். இவ்வறிக்கையை வெளியிடுவதையிட்டு பொறுப்புணர்ச்சியுடன் நடவடிக்கை எடுத்தகூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் சகல பணியாளர் குழாத்திற்கும் நன்றி தெரிவிக்கக் கிடைத்தநல்லதொரு சந்தர்ப்பம் எனக் கருதுகின்றேன்.

கூட்டுறவு இயக்கத்தைமற்றுமொரு புத்தாயிரமாம் ஆண்டுக்கு முன்கொண்டு செல்ல சகல கூட்டுறவு அமைப்புக்களுக்கும் மற்றும் கூட்டுறவு தலைமைத்துவத்திற்கு பலமும், தைரியமும் கிடைக்கட்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

2001.09.15
கொழும்பு

**ஜீ.எஸ்.எல். பொன்சேகா**
கூட்டுறவு அபிவிருத்தி
ஆணையாளரும், கூட்டுறவுச்
சங்கங்களின் பதிவாளரும்.

# அட்டவணை


| | | பக்கம் |
|---|---|---|
| 01 | கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் தனித்துவம். | 01 |
| 02 | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நிறுவன அமைப்பு. | 04 |
| 03 | விவசாய மற்றும் கைத்தொழில் அபிவிருத்திப்பிரிவு. | 08 |
| 04 | வங்கி - சட்டம் - கணக்காய்வு மற்றும் விசாரனைப் பிரிவு. | 21 |
| 05 | வாணிப முகாமைத்துவம், மானுடவளம் மற்றும் கல்வி நடவடிக்கைகள். | 33 |
| 06 | சமூக நலன்புரி. | 49 |
| 07 | தேசிய மட்டத்திலான கூட்டுறவுச் சங்கங்களும், சமாசங்களும. | 52 |
| 08 | மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களங்கள். | 73 |

# கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
# 2000 ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

## 01. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் தனித்துவம்

இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தை அபிவிருத்தி செய்யவும் மற்றும் இயக்கிச் செல்லவும் உதவிச் சேவைகள் தொகுதிக்குப் பொறுப்பாக நடவடிக்கை எடுக்கின்ற கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நீண்டகால நோக்கை முன்வைத்து தமது பணிகளை நிறைவேற்றிவருகிறது.

### 01.1 நோக்கம்

கூட்டுறவு இயக்கத்துக்கு 89 வருடங்கள் நிறைவுறுவதும், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கு 70 வருடங்கள் பூர்த்தியாவதுடன் 2000 ஆம் புத்தாயிரமாம் ஆண்டில் தமது செயற்பாடு திருப்புமுனையாக்க வருடத்துக்குள் வளங்கள் மற்றும் செயற்பாடுகளை இயக்கத்தில் பிரயோகிப்பதால், அதனுடாக பெற்றுக் கொண்டுள்ள பெறுபேறுகளை பரிசீலனை செய்வதுடன், எதிர்வரும் வருடத்திற்கு சக்திவாய்ந்த ஆரம்ப மொன்றினைக் குறிப்பிடுவதும் இதன் நோக்கமாகும்.

### 01.2 தத்துவம்

சமூகத்துக்கு புத்தூக்கமளிப்பதனூடாக இருபத்தோரவது நுற்றாண்டுக்கு இலங்கையில் விழிப்புணர்வுடைய கூட்டுறவு மக்கள் சமுகமொன்றினை நிர்மாணித்தலும் மற்றும் உறுதிப்படுத்தலும்.

### 01.3 செயற்பணி

அரச கொள்கைகளுக்கு ஏற்ப, நிரந்தர தேசிய அபிவிருத்திக்கு பிரபல்யம் வாய்ந்தபங்களிப்பினை பெற்றுக்கொடுக்கும் பொருளாதார அமைப்பில் பிரயோசனமுள்ள பங்கேற்கும் சுயசக்தியினை அடிப்படையாகக் கொண்ட சுயாதீன ஜனநாயக அங்கத்துவ பங்கேற்றலுடன், சக்திவாய்ந்த மக்கள்

அமைப்பொன்றாக கூட்டுறவு இயக்கத்தைப் போசிப்பதற்குத் தேவையான சகல வசதிகளையும் பெற்றுக் கொடுத்தல்.

## 01.4 செயற்பாடுகள்

பொதுத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் போது, தனிப்பட்ட எதிர்பார்ப்புக்களிலிருந்து விடுபட்டு, கூட்டுறவு ஒழுங்கமைப்பு முறைகளிலிருந்து கொண்டு, மக்களுக்கு சேவைகளை வழங்கி, தேசிய அபிவிருத்திக்காக பாரிய பங்களிப்பினை பெற்றுக் கொடுத்து, அரச கொள்கைகளை செயல்படுத்தும் ஒரே நிறுவனமாக கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் பொறுப்பொன்றினைக் கொண்டுள்ளது அதற்காகவென கீழே தரப்பட்டுள்ள பரந்தசெயற்பாடுகளை நிறை வேற்ற முடியுமென மிகத்தெளிவாக இனங்கண்டுள்ளது.

- ❖ கூட்டுறவின் தனித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட, கூட்டுறவுத்தொழில் முறையை போஷிப்பதற்கான சகல வளங்களையும் பெற்றுக் கொடுத்தல்.
- ❖ அரச கொள்கைகளுக்கு உவப்பான நிரந்தர அபிவிருத்தி பிரவேசமொன்றினுக்கு கூட்டுறவின் பங்கேற்றலை உறுதிப்படுத்துதல்.
- ❖ மக்கள் எதிர்நோக்கும் சமுக, பொருளாதார, மற்றும் கலாச்சார சிக்கல்களுக்கு மாற்றுத் தீர்வாக கூட்டுறவுத் துறையை ஈடுபடச் செய்வதற்கு உதவி புரிதலும், மற்றும் வளங்களைப் பெற்றுக் கொடுத்தலும்.
- ❖ கூட்டுறவுக் கொள்கை மற்றும் பண்புகள் அடிப்படையிலான தொரு வெற்றிகரமான தொழில்முறை யொன்றாக தொழில் முகாமைத்துவம் மற்றும் கூட்டுறவுத் தலைமைத்துவத்தை ஈடுபடுத்தச் செய்து, சந்தைப் பொருளாதார முறைக்கு முகங்கொடுக்கும் வழிமுறைகளை செயல்படுத்துதல்.
- ❖ அரச .கொள்கைகள், மற்றும் சட்ட வரையறைக்குள் இயங்குவதன் மூலம் இயல்விளைவுடைய இணைப்பாள ரொருவராக இயக்கத்தை வழிநடாத்துதல்.

## 01.5 கடமைகள்

கூட்டுறவு இயக்கத்தின் செயற்பணிகளை உரிய விதமாக நிறைவேற்றுவதற்காக, கீழ்க்குறிப்பிடப்படும் துணை செற பாடுகளை நிறை வேற்றுவதற்காக, திணைக்களத்தின் நிரந்தர மான பங்களிப்பை பெற்றுக் கொடுக்கின்றது.

- ❖ கூட்டுறவு இலட்சியத்துக்குள் சட்டரீதியான மற்றும் ஒழுங்கமைப்பைத தயாரித்தல்.
- ❖ தேசிய அபிவிருத்தியுடன் இணைந்துள்ள பலதரப்பட்ட வேலைத் திட்டங்களை கூட்டுறவு இயக்கத்துக்கு அறிமுகப்படுத்தலும் மற்றும் செயற்படுத்தலும்.
- ❖ கூட்டுறவுச் சங்கங்களின் மறுசீரமைப்பு, கணக்காய்வு மற்றும் ஒழிப்புச் செய்தல்.
- ❖ கூட்டுறவுச் சங்கங்களின் முகாமைத்துவத்தை வலுப்படுத்தும் உபாயவழிகளை அறிமுகப்படுத்தலும், மற்றும் செயற்படுத்தலும்.
- ❖ கூட்டுறவு இயக்கத்தின் அபிவிருத்தி, மற்றும் பரம்பல் வழி காட்டல் செயற்பாடுகளுக்காக அரச உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக் கொள்ளலும் மற்றும் பயிற்சியளித்தலும்.
- ❖ கூட்டுறவுக் கல்வி, பயிற்சி தகவல்கள் தயாரிப்பதன் மூலம் இயக்கத்தின் மனிதவள அபிவிருத்தி.
- ❖ கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்தல், பிணக்குகளைத் தீர்த்து வைத்தல், விசாரனை மற்றும் மீள்நோக்கு நடவடிக்கைகளை நிறைவேற்றல்.
- ❖ கூட்டுறவு இயக்கத்தின் தனித்துவத்தைப் பாதுகாப்பதுடன், நல்லதொரு தோற்றத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளல்.

## 02. கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நிறுவன அமைப்பு

2000 ஆம் ஆண்டில் கூட்டுறவு இயக்கத்தின் பால் அரச பங்களிப்பை பெற்றுக் கொடுக்கும் மார்க்கம் வேறு ஒரு வழிக்கு திருப்பப்பட்டதாக காணக்கூடியதாக உள்ளது. வருடத்தின் முதல் மூன்று காலாண்டுக்குள் அரச பரிபாலனத்தின் வசதிக்காக, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் கீழ், அமைச்சரொருவர் மற்றும் பிரதியமைச்சரொருவர் செயற்பட்டதுடன், இறுதிக் காலாண்டில் அங்கு மாற்றம் ஏற்படுத்தப்பட்டு, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் ஒருவர் மாத்திரம் அமைச்சுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

இவ்வருடத்துக்குள் அமைச்சு, மற்றும்திணைக்களம் நெருங்கிய தொர்புடன் கூட்டுறவு இயக்கத்துக்கு அரசபங்களிப்பை வழங்கியது. இத்துடன் பலவருடகாலமாக ஆதி பாதவீதியில் மக்கள்வங்கிக் கட்டிடத்தில் இயங்கிவந்த திணைக்களத்தின் பிர தான அலுவலகம், வேறு வசதிகளுடன் கூடிய ஒரு இடத்திற்கு மாற்றப்படவேண்டுமென்ற அவசியம் தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டுவந்தது.

திணைக்களத்தின் தலைவராக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் பதிவாளர் கடமையாற்றுவார். அவருக்கு உதவியாக பிரதி ஆணையாளர்கள் மற்றும் உதவி ஆணையாளர்கள், உப ஆணையாளர களும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் எழுதுவினைஞர் போன்ற பணியாளர் குழாமும் நியமிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு விடயத்தைபன்முகப்படுத்தப்பட்டதனால் எட்டு மாகாண சபைகளில் அந்நடவடிக்கைகளுக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் கீழ், மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் பதிவாளர்களினால் வழிநடாத்தப்படுகிறது மத்திய அரசின் நடவடிக்கைகள் இதனால் தீவடங்கிலுமுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் உச்சமட்டக்கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்களை நிர்வகிக்கும் பணியையும் அரசிற்கும், மாகாண சபைகளுக்குமிடையே கூட்டுறவு விடயத்துக்கு தொடர்புறுத்தும் பணிகள் வரை வரையறுக்கப்பட்ட அளவில் இருந்தது.

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கு வசதியாக கீழ்வரும் விதமாக பலபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு செயல்படுகிறது.

- ❖ நிருவாகப் பிரிவு
- ❖ விவசாய மற்றும் கைத்தொழில் பிரிவு
- ❖ வங்கி, சட்டம், கணக்காய்வு மற்றும் விசாரணைப்பிரிவு
- ❖ வர்த்தகம், முகாமைத்துவம், மனிதவளம் மற்றும் கல்விப்பரிவு.
- ❖ கூட்டுறவுக் கல்லூரி
- ❖ நிதிப்பிரிவு.


கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/பதிவாளராகக் கடமைபுரியும் நிருவாக சேவையின் முதலாம் வகுப்பைச் சேர்ந்த திரு. பீ.ஏ.ரனவத்த அவர்கள் 2000.07.17 ஆந் திகதியிலிருந்து இளைப்பாறியதுடன், நிருவாகசேவையின் முதலாம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தரான திரு.ஜீ.எஸ்.எல். பொன்சேகா அவர்கள் ஊவாகமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பதிவாளராகக் கடமையாற்றியதன் பினனர், தலைமை அலுவலகத்திற்கு பிரதி ஆணையளராக மாற்றம் பெற்று நிரப்பப்படவேண்டிய பதவிக்கு 2000.07.17 ஆந் திகதியிலிருந்து நியமிக்கப் பட்டார்.

மத்திய அரசின் கூட்டுறவு நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக ஆணையாளருக்கு 131 பேரைக்கொண்ட பணிப்பாளர் குழாத்தின் உதவிகிடைக்கப் பெற்றது. எட்டு மாகாணங்ளினதும் நடவடிக்கைகளுக்காகவென உள்ள பணியாளர் குழாம் 1756 பேராகும். அதன் அமைப்பு கீழ்க்கண்டவாறாகும்.

## 2.1 பணியாளர் குழாம் 2000

| | | பிரதான காரியாலயம் | மேல் | மத்திய | தென் | வடமேல் | வடமத்திய | ஊவ | சப்ரகமுவ | வடகிழக்கு | இலங்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 09 |
| 2 | பிரதி ஆணையாளர்கள் | 2 | - | 2 | - | 1 | - | - | - | - | 05 |
| 3 | சிரேஷ்ட உப.ஆணையாளர் | 1 | - | - | - | - | - | - | - | - | 01 |
| 4 | உதவி, ஆணையாளர் | 3 | 6 | 1 | 5 | 9 | 5 | 2 | 3 | 15 | 49 |
| 5 | கணக்காளர் | 1 | - | - | - | - | - | - | - | - | 01 |
| 6 | நிருவாக உத்தியோகத்தர் | 1 | - | - | - | 1 | - | - | - | - | 02 |
| 7 | மாவட்ட உத்தியோகத்தர் | 5 | 5 | 2 | 6 | 2 | - | 3 | - | 17 | 40 |
| 8 | கூட்.சங்கப் பரிசோதகர் | 33 | 269 | 212 | 202 | 160 | 85 | 88 | 117 | 233 | 1399 |
| 9 | விரிவுரையாளர்கள் | 3 | - | - | - | - | - | - | - | - | 3 |
| 10 | நூலகர் | 1 | - | - | - | - | - | - | - | - | 1 |
| 11 | எழுதுநர்/ சம்ாந்தரதரம் | 34 | 21 | 28 | 19 | 32 | 17 | 10 | 8 | 56 | 225 |
| 12 | விடுதிப்பொறுப்பாளர் | 1 | - | - | - | - | - | - | - | - | 1 |
| 13 - | கட்புல, செவிப்புல -உதவியாளர் | - | - | - | - | - | - | - | - | | |
| 14 | சாரதி | 6 | 4 | 4 | 5 | 4 | 2 | 2 | 1 | - | 28 |
| 15 | சமைற்காரர் | 4 | - | - | - | - | - | - | - | - | 4 |
| 16 | காரி.உதவியாளர் | 32 | 3 | 5 | 6 | 10 | 1 | 6 | 2 | 36 | 101 |
| 17 | மொழிபெயர்ப்பாளர் | 1 | - | - | - | - | - | - | - | - | 1 |
| 18 | தகவல் தொழில் நுட்ப உதவியாளர் | - | - | 5 | - | 8 | - | - | - | - | 13 |
| 19 | கணக்குப்பதிவாளர் | 2 | - | - | - | - | - | - | - | 1 | 3 |
| 20 | காசாளர் | 1 | - | - | - | -- | - | 1 | - | - | 2 |
| | மொத்தம் | 132 | 309 | 260 | 244 | 228 | 111 | 113 | 132 | 359 | 1888 |

கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காய்வு நடவடிக்கைகள்/ விசாரனை நடவடிக்கைகள்/ நிருவாக நடவடிக்கைகள்/ முகாமைத்துவ நடவடிக்கைகள்/ மற்றும் பலதரப்பட்ட பணிகளின் தமது பங்களிப்பை பெற்றுக் கொடுப்பதற்காக, மத்திய அரசின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் 33 பேரும், மாகாண சபைகளில் 1366 பேரும் ஈடுபட்டுள்ளதுடன், இது மொத்தப் பணியாளர் குழாத்தின் 75% வீதமாகும்.




திணைக்கள பணியாளர் குழாம் மற்றும் சம்பந்தப்பட்ட நிருவாக பணிகள், பிரதி ஆணையாளர் ஒருவரின் மேற் பார்வையின் கீழ் நிகழ்ந்தது. பொல்கொல்ல கூட்டுறவுக் கல்லூரி மற்றும் பல அமைச்சுக்களுட்பட தலைமை அலுவலகத்தின் பல பிரிவுகளுக்கும் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் 131 பேரினது நிருவாக நடவடிக்கைள் இப்பிரிவுக்கு உரியதாவதுடன், அதற்கு வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர் குழாமும் அதனைச் சேர்ந்ததாகும்.

இக் காலத்துக்குள் நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் ஐந்து (5) பேரும் திணைக்களத்தின உதவி ஆணையாளர் மூவரும் (3) கணக்காளர் சேவையைச் சேர்ந்த ஒருவரும் (01) பணியாளர் குழாத்திற்குட்பட்டுள்ளதுடன், வர்த்தக, முகாமைத்துவ பிரிவின் பிரதி ஆணையாளர் பதவியும், உதவி ஆணையாளர் பதவி 02 உம் வெற்றிடமாக நிரப்பப்படாமலிருந்தது. உரிய வருடத்தில் ஒரு கூட்டுறவுப் பரிசோதகர் மற்றும் எழுது வினைஞர் சேவையைச் சேர்ந்த 04 பேருக்கு புதிதாக நியமனம் பெற்று பணியாளர் குழாத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

## 03. விவசாய மற்றும் கைத்தொழில் அபிவிருத்திப்பிரிவு

இத்திணைக்களத்தின் விவசாயப்பிரிவு விசேடமாக கூட்டுறவு இயக்கத்துக்கு மிக்வும் விசேடமாக அரசதுறையுடன் இணைந்து விவசாயக் கைத்தொழில் அபிவிருத்திக்கு துணை புரிகிறது.

மாகாண சபைகளுக்குரிய விவசாயகைத்தொழில் நடவடிக்கைகள் சம்பந்தமாக கூட்டுறவுச் சங்கங்களின் உதவியுடன் விவசாய உற்பத்தி. விற்பனை, உள்ளீடுகள் தயாரிப்புக்களுக்கு முதலிடம் கொடுத்து விவசாயப்பிரிவு தனது பங்களிப்பை வழங்குகிறது. உத்தரவாதப்படுத்தப்பட்ட விதைநெல் உற்பத்தி, பெரிய வெங்காய விதைஉற்பத்தி, நெல் மற்றும் விவசாயப்பயிர் கொள்வனவு செய்தல், பின் அறுவடைத் தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் போன்ற விவசாயம் சார்ந்த செயல்களுக்காக நிதிவசதிகள் மற்றும் வளங்களை வழங்குவதும் அறிவுறுத்தல் ஆலோசனைகளைப் பெற்றுக் கொளடுப்பதும், இவ்வருடத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தெளிவாகத் தெரியக்கூடிய சேவைகளாகும்.

மக்களின்து சமூக பொருளாதார அமைப்புக்குள் கூட்டுற வின் பிரதிபிம்பத்தைகட்டியெழுப்பப்படும் விதமாக விவசாயிகளுடன் சமீபித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள இப்பிரிவு நிரந்தரமாகவே செயலாற்றி உள்ளது.

**மேற்கூறிய சேவைகளை நிறைவேற்றுவதற்காக விவசாப் பிரிவின் பிரதானமான பங்களிப்புக்கள் இவ்வாறாகும்.**

❖ விவசாய உற்பத்திக் கருத்திட்டங்களை அறிமுகப்படுத்தல்.

❖ விவசாய உள்ளீடு வசதிகளை பெற்றுக்கொடுத்தலும், ஈடுபடுத்தலும்.

❖ விவசாய தொழில் நுட்ப அறிவை பெற்றுக்கொடுப்பதன் மூலம் சேதாரத்தைகுறைத்தலும், மற்றும் பின் அறுவடைத்தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தலும் மற்றும் செயல்படுத்தலும்.

- ❖ தனிநபர் மற்றும் நிறுவனத் தொடர்பாடல்.
- ❖ விற்பனை அபிவிருத்தி நடவடிக்கைகள்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் விவசாயக் கைத்தொழில் நடவடிக்கைகளை திட்டமிட்டு அமுல்படுத்த விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமித்து ஊக்கமளிக்கப்பட்டதன் பின்னர், பட்டதாரிகள் 43 பேர் ஊவா, வடமேல், மத்திய, மற்றும் சப்ரகமுவ மாகாண கூட்டுறவுச் சங்கங்களினால் நியமிக்கப்பட்டு மெச்சத்தக் பணியொன்றில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பல வருடகாலமாக செயற்படுத்தப்படுகின்ற சுத்தமான போசாக்குள்ள அரிசிக் கருத்திட்டம், அரிசி மா உற்பத்திக்கருத்திட்டம், உள்ளூர் பெரிய வெங்காய விதை உற்பத்தி மற்றும் நெல்லுற்பத்திக் கருத்திட்டம், விவசாயப் பொருட்கள் கொள்வனவுக் கருத்திட்டம், நெல் மற்றும் ஏனைய பயிர் கொள்வனவு போன்ற கருத்திட்டங்களும், இவ்வருடத் திற்குள் தொடர்ச்சியாகவும், வெற்றிகரமாகவும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

## 3.1 விதைநெல் உற்பத்திக் கருத்திட்டம்

இவ்வருடமாகும் போது, கூட்டுறவுச் சங்கங்கள் 20 இக்கருத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. 1950 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் 910 பேரினால் உற்பத்தி செய்யப்பட்ட விதைநெல்லின் அளவு 4200 மெ. தொன்னாகும். 2000ம் வருடத்தில் இலங்கையில் விதைநெல் உற்பத்தி 12,352.9 மெ. தொன்களாகும். இவ்வருடத்திற்குள் இலங்கையில் விதைநெல்லுற்பத்தியில் 34% வீதத்தைகூட்டுறவுச் சங்கங்களினால் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. இக்கருத்திட்டத்திற்காக, அவசியமான இயந்திர உபகரணங்களை 2001 ஆம் ஆண்டில் பெற்றுத் தரத்திட்டமிடப்பட்டுள்ளது.

விதைநெல்லுற்பத்தி விவசாயத் திணைக்களத்தின் பங்கேற்றலுடன் ரூபா 11.7 மில்லியன் பெறுமதி வாய்ந்தவிதை நெல் தயாரிக்கும் இயந்திரங்கள் 07, உரிய மாகாணங்களுக்கு இவ்வருடத்துக்குள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

## 3.2 நெல் கொள்வனவு செய்யும் கருந்திட்டம் :-

இவ்வருடத்தில் நெல் கொள்வனவு சம்பந்தமாக அரசின் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், திறைசேரியினால் 692.2 மிலியன் ரூபா வட்டியில்லாதகடன் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டது. ஒரு விசேடமான நிகழ்வாகும். இதற்குப் பிறம்பாக கூட்டுறவு அபிவிருத்தி நிதியிலிருந்து 43?0 மில்லியன் ரூபாவும் விவாய அபிவிருத்தி நிதியிலிருந்து 16.5 மில்லியன் ரூபாவும் கூட்டுறவுச்சங்கங்களுக்கு நெல் கொள்வனவு செய்வதற்ாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் பெறு பேறாக 187 கூட்டுறவுச் சங்கங்கள் 1073.3 மிலியன் ரூபா பெறுமதியான 82,624 மெட்ரிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் கீழ்வரும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடிந்துள்ளது.

- ❖ வர்த்தக ரீதியான நெல் விவசாயிகளுக்கு நியாயமான விலையைப்பெற்றுக் கொடுத்தல்.
- ❖ நுகர்வாளர்களுக்கு நியாயமான விலைக்கு தரமான அரிசியைப்பெற்றுக்கொடுத்தல்.
- ❖ கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான அரிசி வழங்கப்படுவதனால் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்தல்.
- ❖ கூ.மொ.வி. நிலையம் ஆரம்பித்துள்ள பாரிய அளவிலான அரிசி ஆலைகளுக்கு நெல் விநியோகித்தல்.
- ❖ அரச வழுங்கல்களுக்காக பங்களிப்பினைப் பெற்றுக்கொடுத்ல்.

## 3.3 சுத்தமான போசாக்குள்ள அரிசி உற்பத்தி.

கிராமிய மட்டத்தில் குடிசைக் கைத்தொழிலாக அரிசி உற்பத்தி செய்வதற்கு இக்கருத்திட்டத்தினை 96 கூட்டுறவுச் சங்கங்களுக்கு இவ்வருடமாகும் போது அற ிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அங்கத்துவ குடும்பங்கள் 8900 அளவில் இக்கருத்திட்டம் தொடர்பான தொழில் நுட்ப அறிவை அநுராதபுரம், அறுவடை தொடர்பான தொழில் நுட்ப அறிவை அநுராதபுரம், அறுவடை தொடர்பான தொழில் நுட்ப

நிறுவனத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டதும் அதனூடாக இனங்காணப்பட்ட விவசாயிகளிடமிருந்து 28,752 மெட்ரிக் தொன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டு அதன் மூலம் சம்பாதிக்கப்பட்டுள்ள தொகை 6900 மில்லியன் ரூபா அளவிலாகும்.

## 3.4 அரிசி மா உற்பத்திக் கருத்திட்டம்

வரையறுக்கப்பட்ட பலுகஸ்தமன பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் செயல்படுத்தப்படுகின்ற இக்கருத்திட்டத்திற்காக நெல் விநியோகிக்கும் விவசாயிகளின் எண்ணிக்கை 30 ஆகும். இவ்வருடத்தில் அரிசி மா 60.6 மெட்ரிக் தொன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவ்வரிசிமா உள்ளூர்ச் சந்தையில் கூட்டுறவு, கூ.மொ.வி. நிலையம் மற்றும் தனியார் விற்பனை நிலையங்களிலிருந்து விற்பனை செய்யப்படுகிறது.

## 3.5 உள்ளூர் பொரிய வெங்காய விதைஉற்பத்திக் கருத்திட்டம்

இக்கருத்திட்டம் கூட்டுறவுச் சங்கங்கள் 02 இனால் செயற்படுத்தப்படுவதுடன், விவசாயிகள் 645 பேர் இதில் இணைந்துள்ளனர். இவ்வருடத்தில் ஏற்பட்ட சீர் கெட்ட காலநிலைத் தாக்கத் தினால் இக்கருத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த முடியாது போயிற்று.

## 3.6 உள்ளூர் பொருட்களின் பரிமாற்று வேலைத்திட்டம்

உள்ளூர் விவசாய உற்பத்திகளை , கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்வனவு செய்து ஏனைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்வதன் மூலம் உள்ளூர் பொருட்கள் பரிமாற்றுத்திட்டம் செய்லபடுத்தப்படுகிறது. அவ்வேலைத்திட்டத்துக்கு 120 கூட்டுறவுச்சங்கங்கள் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதுடன், கீழ் வரும் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ❊ நெல் | 82,624 | மெ.தொன் |
| ❊ பெரிய வெங்காயம் | 60.0 | மெ.தொன் |
| ❊ உலர் மிளகாய் | 80.0 | மெ.தொன் |
| ❊ பயறு | 60.0 | மெ.தொன் |
| ❊ காய்கறி | 148.0 | மெ.தொன் |
| ❊ பழங்கள் | 120.0 | மெ.தொன் |

## 3.7 பின் அறுவடை தொழில் நுட்பத்தின் ஊடாக மரக்கறி. மற்றும் பழவகைகளினது சேதாரத்தைக் கட்டுப்படுத்தும் கருத்திட்டம்

போக்குவரத்தின் போதும், விற்பனையின் போதும் மரக்கறி மற்றும் பழவகைகளினது சேதாரத்தைக் குறைத்து, உற்பத்தியாளருக்கு தரமான விலையைப் பெற்றுக் கொடுக்கவும், நுகர்வாளருக்கு நியாயமான விலைக்கு தரமான பொருட்களைப் பெற்றுக்கொடுப்பதே இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். இவ்வருடத்தில் இக்கருத்திட்டம் 40 கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், சேதாரம் 40% லிருந்து 10% வரைகுறைக்க முடிந்துள்ளது. இக்கருத்திட்டத்திற்காக அவசியமான பிளாஸ்டிக்கினாலான உறைகள் 2001 ம் வருடத்தில் பெற்றுக் கொடுக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.8 ஜயிக்கா உதவி உணவு மற்றும்போஷக்கு அபிவிருத்திக்கடன் திட்டம்

இலங்கையின் மத்திய வங்கியின் மேற்கூறிய கடன்திடடத்திற்கேற்ப கடன் வசதிகள் பெற்றுக் கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள் 25உம் இக்கடன்தொகையை விவசாயக் கைத்தொழில் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தி உள்ளது. கூட்டுறவுச் சங்கங்களுக்காக, அங்கத்தவர்களினால் விவசாயக் கைத்தொழில் கருத்திட்டத்தை செயல்படுத்தி, இதனால் சிறந்த பெறுபேற்றை பெற்றுக் கொடுத்துள்ளதுடன், இவ்வருடமாகும் போது, கருத்திட்டப் பெறுநர் 357 பேருக்கு 10% வீதவட்டியில் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள கடன்தொகை 321.6 மில்லியன் ரூபாவாகும்.

### 3.9 பாலுற்பத்திப் பிரிவு

பாலுற்பத்திப் பிரிவு தொடர்பாக ஆராயும் போது, இலங்கையின் மொத்தபாலுற்பத்தி 14425.0 பத்து இலட்சம் லீற்றராகும். இதில் தனியார் துறையினரால் கொள்வனவு செய்யப்பட்ட பாலின் அளவு 396.7 பத்து இலட்சம் லீற்றர்களாகும். கூட்டுறவுத் துறையினால் சேகரிக்க்பபடும் பால் 34.4 பத்து இலட்சம் லீற்றராகும். இது மொத்த உற்பத்தியின் 0.2% வீதமாகும்.

கூட்டறவுத் துறையினால் சேகரிக்கப்பட்ட மொத்தப் பாலில்,

- ❊ நெஸ்லே கம்பனிக்கு 20.7பத்து இலட்சம் லீற்றர் பாலும்,
- ❊ கிரியா கம்பனிக்கு 12.6 பத்து இலட்சம் லீற்றர் பாலும்

ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இங்கு கூறப்பட்ட உள்ளீடுகளின் தயிர், யோகட், பசு நெய், பால் டொபி, இனிப்பூட்டப்பட்ட பால் போத்தல்கள், மற்றும் பால் பக்கெட் போன்றவற்றுக்காகவும் குடிப்பதற்கான பாலுக்காகவும், பயன்படுத்தப்பட்டுள்ளது.

பால் சேகரிக்கப்படும் போது, பாலுற்பத்தியாளருக்கு நியாயமான விலையைப் பெற்றுக் கொடுக்க பாலின் அடர்த்தி, மற்றும் கொழுப்புத் தன்மையை பரீட்சிப்பதற்காக, ஒன்று ரூபா 94,000/= பெறுமதியான பால் பரீட்சித்துப் பார்க்கும் மின்சார இயந்திரங்கள் 27 மிருக வளர்ப்பு மற்றும் சுகாதார அமைச்சின் ஒத்துழைப்புடன் பாலுற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

நடைமுறையிலுள்ள போட்டியான சவால்களுக்கு முகங்கொடுக்கும் சக்தி சங்கங்களிலிருந்து தூரமாவதற்கும், நிதிக் கஷ்டம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் நலிவடைவதனால் சங்கங்கள் 121 இதுவரை செயலிழந்து போயிருப்பதாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

பால் சார்ந்தஉற்பத்திகளை தயாரிப்பதன் மூலம் பாலுற்பத்தியாளர்களுக்கு நல்லதொரு விலையைப் பெற்றுக் கொடுக்கவும், மற்றும் போஷாக்குள்ள உணவொன்றை நியாயமான விலைக்கு நுகர்வாளருக்கு பெற்றுக் கொடுப்பதன் மூலம் பாலுற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களை கட்டியெழுப்ப என்றும் நடவடிக்கை மேற்கொண்டுள்ள திணைக்களத்தின் வழிகாட்டலின் பேரில் ஜயிக்கா உதவித் திட்டத்தின் கீழ் திணைக்களத்தினதும் மற்றும் சங்கத்தின் நிதியையும் சேர்த்து 20 மில்லியன் ரூபா செலவிட்டு நடுத்தர அளவிலான பாலுற்பத்திச் சாலை ஒன்று 2000 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் சங்கருவன் கெத பாலுற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பால் விற்பனைச் சாலைகளை ஆரம்பிக்கும் கருத்திட்டம்.

❖ நோக்கம் :-

1 இலங்கை திரவப்பால் பாவனையை விருத்தி செய்தல்.

2 நுகர்வுாள மக்களுக்கு சுத்தமான போசக்குள்ள பால் சார்ந்த உற்பத்திகளுக்கு நியாயமான விலைக்கு இலகுவாகப் பெற்றுக் கொடுத்தல்.

3 மக்களின் மந்த போஷனையை இல்லாதொழிக்கும் அரசின் முயற்சிகளுக்கு கூட்டுறவு இயக்கத்தின் பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்தல்.

4 இலங்கையில் பாலுற்பத்தியை விருத்தி செய்வதற்காக பாலூற்பத்திச் சங்கங்களின் வேலைத்திட்டத்தைவலுப்பெறச்செய்தல்.

❖ தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பால் சாலைகளின் எண்ணிக்கை.

| மாகாணம் | பால் சாலைகளின எண்ணிக்கை |
|---|---|
| மேல் | 27 |
| மத்திய | 07 |
| தென் | 05 |
| ஊவா | 05 |
| சப்ரகமுவ | 05 |
| வடமேல் | 08 |
| வடமத்திய | 08 |
| வடக்கு கிழக்கு | 50 |
| மொத்தம் | 115 |

- ❖ பாலுற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் வசமுள்ள நடுத்தர அளவிலான பாலுற்பத்திச் சாலைகள் 63 லிருந்து பால் சார்ந்த உற்பத்திகள் செய்யப்படும் 20 சங்கங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் இப்பால்சாலைகளினுடாக விற்பனை செய்யப்படுவதுடன், இக்கருத்திட்டத்தின் கீழ், உருவாக்கப்பட்டுள்ள வேலை வாய்ப்புக்களின் எண்ணிக்கை 291 ஆகும்.
- ❖ வருடாந்த விற்பனை 1200.00 மில்லியன் ரூபாவாவதுடன், போசாக்குத் தரத்தில் கூடிய தரமான கைத்தொழில் பாற்சாலைகளுக்காக தொழில் நுட்ப உதவி, இலங்கை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், மற்றும் இலங்கை பாலுற்பத்தி கூட்டுறவுச் சங்க சமாசத்திலிருந்து வழங்கப்படுகிறது.
- ❖ இப் பால் சாலைகளின் பாலுணவுப் பொருட்களுக்குப் பகரமாக போஷாக்குத் தரத்தில் சிறந்த செயற்கை உணவு மற்றும் புதிய பழங்கள் விற்பனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பால்சாலைகளை நடாத்திச் செல்வதற்காக நிதிப் பிரச்சினைகள் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை வட்டி அடிப்படையில் கூட்டுறவு அபிவிருத்தி நிதியிலிருந்து ஒரு சங்கத்துக்கு 3 இலட்சம்

ரூபா வீதம் 05 சங்கங்களுக்கு 1.5 மில்லியன் ரூபா கடன் வசதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

## 3.10 விவசாய மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி ஊக்குவிப்புக்காக இப்பிரிவினால் நடாத்தப்பட்ட பயிற்சிப்பட்டறை.

விவசாயக் கைத்தொழில் மற்றும் கைத்தொழில் வியாபார நடவடிக்கைகளை தற்போதைய வியாபார அமைப்புக்கேற்ப, வியாபார மட்டத்தில் அபிவிருத்தி செய்வதற்காக, விவசாய மற்றும் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவினால் மக்கள் வங்கியின் உதவியினடிப்படையில் உரிய கருத்திட்டங்களில் ஈடுபட்ட அங்கத்தவர்களுக்கும், பெண் அங்கத்தவர்களு முட்பட தொழில்நுட்ப அறிவு மற்றும் ஆலோசனைகள் பெற்றுக் கொடுப்பதற்காக பட்டறைகள் நடாத்தப்பட்டதுடன், புதிதாக அறிமுகப்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் தொடர்பாக, வளப்பங்களிப்பாளர்களையும் அத்துறையுடன் தொடர்புடைய நிறுவனங்களுடன் இப்பயிற்சிப் பட்டறைக்கு பங்கேற்கச் செய் வதற்கு இவ்வருடத்தில் வழிசெய்யப்பட்டுள்ளது.

| பயிற்சிப் பட்டறை | எண்ணிக்கை | அறிவூட்டிய தொகை |
|---|---|---|
| 1. விவசாய உற்பத்திக் கிராம வே.திட்டம் | 01 | 57 |
| 2. உணவு தயாரிப்பதை அடி.கொண்டபட்டறை | 10 | 558 |
| 3. விவசாயம். | 07 | 316 |
| 4. பால் தயாரிப்பு மற்றும் விற்பனை பட்டறை | 01 | 51 |
| 5. மிருக வளர்ப்பு அபிவிருத்தி வே.திட்டம் | 03 | 120 |
| 6. கன்று நடுகை தொழில் நுட்ப பட்டறை | 01 | 32 |
| 7. விதை உற்பத்தி மற்றும் விற்பனைப்பட்டறை | 03 | 143 |
| 8. மரக்கறி, மற்றும் பழவகை சேதாரத்தைக் குறைக்கும் பட்டறை | 01 | 118 |
| 9. பால் விற்பனைச் சாலைப் பரம்பல் தொடர்பான பட்டறை | 03 | 136 |
| 10. கைத்தொழில் அபிவிருத்திப் பட்டறை | 02 | 67 |
| மொத்தம் | 32 | 1598 |

## 3.11 மீன்பிடிப் பிரிவு

விவசாய செய்கை சார்நத நடவடிக்கைகளுக்கு மிகையாக மீன்பிடி கைத்தெழில் சம்பந்தமாக கூட்டுறவு நடவடிக்கைகளும், இப்பிரிவரின் மேற்பார்வைக் குட்பட்டதாகும். மீன்பிடி அமைச்சு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்டு மீன்பிடி கூட்டுறவுச் சங்கத்தினை விருத்தி செய்யும் நோக்கில் திணைக்கள உதவி ஆணையாளர் ஒருவரின் கீழ் உத்தி யோகத்தர்களை தற்காலிகமாக வேறு துறைக்கு மாற்றப்பட்ட மீன்பிடிப் பிரிவு மேலும் இவ்வருடத்தில் செயல்பட்டது. மீனவ மக்களின் சமூக, பொருளாதர மற்றும் கலாச்சார அமைப்புக்குள் கூட்டுறவு அடிப்படையில் அவர்களது கைத்தொழிலைச் செய்து கொள்வதில் உள்ளிடுகை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை கிட்டச் செய்யும் உதவிச் செய்கைகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டது. மீனிடி வங்கி சங்கற்பம், நன்னீர் மின்பிடிக் கைத்தொழிலின் பால் இவ்வருத்தில் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டது.

மீன்பிடி நடவடிக்கைகளை மேம்படுத்துவதையிட்டு நன்னீர் சார்ந்த மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்கள் குளங்கள் மற்றும் நீர்தேக்கங்கள் சார்ந்த நன்னீர் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதனால் அங்கத்துவ எண்ணிகையையும் அதன்பிரகாரம் ஒருவரையறைக்குள் கொண்டுவர வேண்டிய நிலை ஏற்பட்டது. வருடக் கடைசியில் மொத்தக் கூட்டுறவுச்சங்க எண்ணிக்கை 674 ஆக இருப்பதுடன், இவ்வருடத்தில் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 15 ஆகும்.




கிராம சேவையாளர் பிரிவு மட்டத்திலான கடல்நீர் மீன்பிடிக் கூட்டுற்வுச் சங்கங்களில் 25% அளவிலானவை செயல்பாடற்ற நிலையிலிருப்பாகத் தெரிய வந்துள்ளது. தமது

கைத்தொழில்களுக்காக. அங்கத்தவர்களுக்கு மீன் உற்பத்திக்காக கருவிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொள்ளல், உற்பத்திகளை விற்பனை செய்வதற்காக, உபாய மார்க்கங்களைத் தயாரித்துக் கொடுத்தல், உயர் விலையினைப் பெற்றுக் கொடுத்தல், துணை உற்பத்திகளுக்காக வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல், மீனவ மக்களின் வாழ்க்கைச் சுமையிலிருந்து ஓரளவுக்காவது காப்பாற்றிக் கொள்ளல் மற்றும் சமூக நலன்புரி போன்ற அடிப்படை குணாதிசயங்களிலிருந்து மீனவக் கூட்டுற வுச் சங்கங்கள் செயலிழக்க மூலகாரணமாய் அமைந்துள்ளது.

மாவட்ட மட்டத்தில் மற்றும் தேசிய மட்டத்திலே கூட்டுற வுச் சங்க சமாசம் நிறுவப்பட்டிருந்தும், ஆரம்பச் சங்கங்களுக்கு தத்தமது பங்களிப்பை பெற்றுக் கொடுப்பதற்கு முடியாமற் போனதையும் இங்கு விசேடமாக குறிப்பிடுதல் வேண்டும். தேசிய மட்டத்தில் இலங்கை தேசிய மீன்பிடி கூட்டுறவுச் சங்கம் சமாச வீழ்ச்சியுற்றிருப்பதும் ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களின் ஒருங்கிணைப்பு தவறிப் போனதும் இங்கு மிக்க கவலையுடன் குறிப்பிட வேண்டியுள்ளது.

மீனவக் கூட்டுறவுச் சங்கங்களை கட்டியெழுப்புவதில் உயர்ந்த செயல்பாடுடன் கூடிய நிறுவன மற்றும் முகாமைத்துவம், நன்றாக இயங்கும் சங்கங்களைத் தேர்ந்தெடுத்து மீன்பிடி வங்கிகள் 64, வருட இறுதியில் தீவு முழுதும் அமைக்கப்பட்டிருந்தது. இம்மீன்பிடி வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ள மொத்த் கடன் தொகை 68.0 மில்லியன் ரூபாவாகும். இவ்வருடத்தில் வழங்ப்பட்டுள்ள தொகை 3.3 மிலியன் ரூபாவாகும்.

இவ்வங்கி, தங்கல்ல பிர்தேசத்தில் 06 சங்கங்களும், சிலாபத்தில் 08 சங்கங்களும், நீர்கொழும்பில் 03 சங்கங்களும், மாத்தறையில் 03 சங்கங்களும் புத்தளத்தில் 05 சங்கங்களும் மன்னாரில் 11 சங்கங்களும் திருகோணமலையில் 03 சங்கங்களும் கல்முனையில் 01 சங்கமும், மட்டக்களப்பில் 10 சங்கங்களும் காலியில் 04 சங்கங்களையும் கொண்டதாகும்.

இம் மீன்பிடி வங்கி மூலம் வருட இறுதியாகும் போது, பிணையாக 5.6 மில்லியன் ரூாவும், அங்கத்துவ வைப்புக்களாக 16.3 மிலியன் ரூபாவும், அங்கத்தவரல்லாதவைப்புக்களாக 2.8 மிலியன் ரூபாவும், சிறுவர்களின் வைப்புக்களாக 2.3 மிலியன் ரூபாவும், நிலையான வைப்புக்களாக 9.3 மிலியன் ரூபாவும் பெற்றக் கொள்ளப்பட்டுள்ளது.

வழங்கப்பட்ட கடன், வலை, உபகரணங்கள் வியாபாரக் கடன், வீடமைப்புக் கடன் போன்றனவாகும்.


மீனவ சமூகத்தவரின் பொருளாதார, மற்றும் சமூக நலன்புரிக்காக சிறுவர் பாடசாலைகள் - நுகர்ச்சிச் சேவை முகவர் தபால் நிலையங்கள் நடாத்தப்படுவதும் மிகவும் விசேடமான விடயங்களாகும்.

இவ்வங்கிகளின் பங்கு நிதியம் 3.3 மில்லியன் ரூபா வாவதுடன், எஞ்சிய இலாபம் 24.1 மிலியன் ரூபாவாகும்.

இங்கு கூறப்பட்ட மீனவ வங்கியூடாக

* தங்கம் மற்றும் அடகுப் பெருட்களை கெதாடுத்தல்.
* அங்கத்தவர்களினது தேவைகள் - மின்சாரம், குடிநீர், தொலைபேசி, போன்ற சேவைகள்.
* சேமிப்புக்கள்
* கடன் மற்றும் சேவைகள் வழங்குவதற்காக, ஆரம்ப உதவிகளை வழங்குவதும் வழங்கப்படும் சேவைகளுக்குட் பட்டதாகும்.

மீன்பிடி வங்கி பரிமாற்றம் செய்வதற்கு முன்னர். மற்றும் பின் வைப்புக்கள் சம்பந்தமாக வருடாந்த மதிப்பீட்டுத் தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.



அங்கத்துவ பொருளாதார விருத்திகளாக உரிய வருடத்தில் 123.4 மில்லியன் ரூபா பெறுமதியான 666 தோணிகளும், உபகர ணங்களும் கொள்வனவு செய்வதற்காக கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

உரிய வருடத்துக்குள் கொள்வனவு செய்யப்பட்ட மீன் உற பத்திகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| கொள்வனவு செய்ததொகை மெ.தொன | 2013 | மிலி.ரூபா | 197.3 |
|---|---|---|---|

அங்கத்தவ மற்றும் அங்கத்தவரல்லாதோருக்காக சிறுவர் பாடசாலை - முகவர் தபால் நிலையங்கள் - நுகர்ச்சி மற்றும் விளையாட்டு, சமூக நலன்புரிப் பிரிவுகளும் செயற்பட்டதுடன் குறிப்பிட்ட வருடத்துக்குள் 1041 பேருக்காக 24 வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது.

## 3.12 கைத்தொழில் பிரிவு

தீவிலுள்ள முழு கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 200 ஆகும். கடந்த ஐந்து வருடத்துடன் ஒப்பிடும் போது, சங்கங்கள் செயல்படாத நிலைக்குட்படுவதன் காரணமாக மொத்தசங்க எண்ணிக்கையில் 22% அளவில் பின்னடைவு காணக்கூடியதாக உள்ளது. அச் சங்கங்களுக்காக முதன்மை அளித்து நடவடிக்கை மேற்கொள்ள பங்கேற்காமையும் நடை முறையிலுள்ள சந்தை அமைப்புக்கருள் சவால்களுக்கு முகங்கொடுக்க முடியாமையும். மற்றும் பற்பல காரணங்களின் அடிப்படையில் கைத்தொழில் சங்கங்கள் பெயரளவில் மாத்திரம் செயல்படுகின்றது.

இச் சங்கங்களுக்குப் பிறிம்பாக, மட்பாண்டக் கைத்தொழில் சங்கங்கள், தச்சு வேலைக் கூட்டுறவுச் சங்கங்கள், தும்புக் கைத்தொழில் சங்கங்களின் எண்ணிக்கை 60 ஆகும். இச் சங்கங்களுள் கிட்டத்தட்ட 06 அளவில் செயல்படுவதுடன், எஞ்சியுள்ளவை செயல்படாத நிலைக்குட்பட்டுள்ளது.

## 4. வங்கி – சட்டம் – கணக்காய்வு மற்றும் விசாரனைப் பிரிவு

கூட்டுறவு அபிவிருந்தி திணைக்களத்திற்குரிய சட்டரீதியான பணிகளில் அதிகமானவை இப்பிரிவுக்கு ஒப்படைக்கப் பட்டுள்ளதுடன், பிரதி ஆணையாளர் ஒருவரும் மற்றும் உதவி ஆணையாளர் ஒருவரின் கீழும் அப்பணிகள் சிறப்புற நிறை வேற்றப்படுகின்றது. கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்தல், கணக்காய்வு, விசாரனை பிணக்குகளைக் தீர்த்துவைத்தல் மற றும் ஒழிப்புச் செய்தல் போன்ற சட்டரீதியான பணிகளாக இப்பிர வுக்குரிய பணிகளுக்குட்பட்டதாகும்.

இக் குறிப்பிட்ட பணிகள் மாகாணரீதியாக மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்களினதும், உச்ச மட்ட மற்றும் தீவடங்கிலுமுள்ள சங்கங்கள் சம்பந்தமாக மத்திய அரசின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினாலும் நிறை வேற்றப்படுகின்றது. பொதுவாக நோக்கும் பொழுது, குறிப்பிட்ட வருடத்துக்குள் இலங்கை முழுவதிலும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் 222 ஆகும். இச்சங்கங்கள் கீழ்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| சங்க வகைகள் | சங்க எண்ணிக்கை |
|---|---|
| மகளிர் சங்கங்கள் | 64 |
| கடன் வழங்கும் சங்கங்கள் | 84 |
| வீடமைப்புச் சங்கங்கள் | 31 |
| பாடசாலைச் சங்கங்கள் | 23 |
| மீன்பிடிச் சங்கங்கள் | 15 |
| விவசாயக் கைத்தொழில் சங்கங்கள் | 5 |
| **மொத்தம்** | 222 |

கூட்டுறவு இயக்கத்தின ஆரம்பத்திலிருந்துமக்களுக்கு மிகவும் நெருங்கிய கூட்டுறவுச் சங்கமாக செயல்பட்ட கடன்வழங்கும் சங்கங்கள் 84 இவ்வருடத்தில் பதிவு செய்யப்பட்டதினால் மக்களின் விருப்பு அச்சங்கத்தின் பால் மேலும் நிலவுவதாக உறுதிப்படுத்த முடியும். மகளிரின்


நலனுக்காக 64 சங்கங்கள் இவ்வருடத்தில் பதிவு செய்யப்பட்டதும் ஒரு விசேட இலட்சனமாகும். மீனவச் சங்கங்கள் 15 பதிவு செய்யப்பட்டதனால், மேலும் மீனவமக்களுக்கு கூட்டுறவு எண்ணக்கரு அவசியம் என உறுதிப்படுத்தப்படுகிறது. மறைந்துள்ள சத்திவாய்ந்த அங்கத்துவ எண்ணக்கருவை விருத்தி செய்யும் ஆரம்பப்படியாக பாடசாலையினுடாக ஆரம்பிக்கப்படவேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதொரு கருத்தாகும். அதனால் இவ்வருடத்துக்குள் பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள் 23 பதிவு செய்யப்பட்டுள்ளது. அக்குறிப்பிட்ட மறைந்துள்ள தலைமைத்துவத்தைவெளிக்கொணரும். மற்றுமொரு முயற்சியாக கருதப்பட முடியும். எவ்வாறாயினும் ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்கள் மாத்திரம் இவ்வருடத்தில் பதிவு செய்பபட்டதும் ஒரு விசேட இலட்சனமாகும்.

இலங்கையிலுள்ள மொத்தசங்கங்களின் எண்ணிக்கை 11721 ஆகும். இதில் 65% வீதம் கூட்டுறவுச் சிக்கனக் கடனுதவிச் சங்கங்களாகும். கிராமியப் பொருளாதாரத்திற்கு உரிமை கோரும் இலங்கையில் கூட்டுறவு சங்கம் ஆரம்பமானது கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்களை முன்னோடியாகக் கருதியே ஆகும். கிராமிய மக்கள் கடன் சுமையிலிருந்து விடுபடுவதற்கும், பொருளாதார மற்றும் சமூக விருத்தி அதனுடாக தெளிவாகியுள்ளது. இன்று இச்சங்கங்கள் இலங்கை முழுவதும் பல்லின மக்களுக்கிடையே வியாபித்துள்ளதுடன், மொத்தச் சங்கங்களின் எண்ணிக்கை 7658 ஆகும்.

மீனவ மக்களின் நலனைப் போன்று மீன் பிடித்திணைக்களத்துடன். தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதனால் மீனவ் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்தல் மற்றும் செயற்பாடு நிகழ்வதுடன், தற்போது நடைமுறையிலுள்ள தடைகள் மற்றும் இடையூறுகள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் மீன்பிடிச் சங்கங்கள் பின்னடைவுக் குட்பட்டுள்ளதாக குறிப்பிடுதல் வேண்டும். இதற்காக துரிதவேலைத்திட்டமொன்றை உருவாக்குவது பொருத்தமானதாகும்.

விவசாயம் சார்ந்ததாக நிறுவப்பட்டுள்ள சங்கங்களின் எண்ணிக்கை 290 ஆகும். தேயிலை - இறப்பர், தெங்கு உற்பத்திக் கிராமங்கள் இதனுள்ளடக்கப்பட்டுள்ளது. இக் குறிப்பிட்ட சங்கங்கள் விவசாயப்பிரிவின் உற்பத்திகளுக்கு றெற்றுக் கொடுக்கும் பங்களிப்பு போதுமானதல்ல. தெங்கு, தேயிலை மற்றும் இறப்பர் கைத்தொழில்களுக்குரிய கூட்டுறவுச் சங்கங்கள் தமது செயற்பணியை நடைமுறையிலுள்ள போட்டிமுறையிலான சந்தைபொருளாதார அமைப்பினடிப் படையில் நடாத்திச் செல்வதும், கவனிக்கற் பாலதான ஒரு விடயமாகும்.

வேலைவாய்ப்பின்மையை ஒழிப்பதற்காக நிறுவப்பட்டுள்ள இளைஞர் மற்றும் சுயதொழில் சங்கங்களின் எண்ணிக்கை 304 ஆகும். அங்கத்துவம் 4.4 இலட்சமாகும். சய வேலைவாய்ப்பு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ள கடன் 8.2 இலட்சம் ரூபாவாகும். உற்பத்தி 22.7 மிலியன் ரூபாவெனவும் இலாபம் 3.05 மிலியன் ரூபாவுமாகும். இச்சங்கங்களின் மூலம் சங்கங்களை மேலும் விருத்தி செய்வதற்காக, பெற்றுக் கொடுக்கப்படும் பங்களிப்பு போதியதாக இல்லை.




பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 1016 ஆகும். இவ்வெண்ணிக்கை முன்னைய வருடத்தைவிட 23 கூடுதலானதாகும். கூட்டுறவு விடயத்தை பாடசாலையில் பரவலாக்கும் காரணிகள் இதற்குக் ஏதுவாகியுள்ளது மொத்த அங்கத்துவம் 2.5 இலட்சமாகும்.

| வியாபார நிலையங்கள் | விற்பனை | சேமிப்ப |
|---|---|---|
| எண்ணிக்கை 10.4 | 9.1 மிலி.ரூபா | 7.2 மிலி ரூபா |

வீடமைப்பு கூட்டுறவுச் சங்கங்கள் 328 ஆகும். இக் குறிப்பிட்ட சங்கங்கள் தத்தமது அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் 2.5 மிலியன் ரூபாவாகும். அவ்வச் சங்க அங்கத்தவர்களுக்கு நிறைவேற்றிய சேவையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அநேகமான கூட்டுறவுச் சங்கங்கள் பெயரளவில் மாத்திரம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

விவசாயக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் சம்பந்தமாக பகுப்பாய்வு செய்யும் போது, வடகிழக்கு மாகாணத்திற்கென மரபுரிமையாகவுள்ள பனங்கட்டிக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள வர்களுக்கு சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதை நோக்கமாகக் கருதி, நிறுவப்பட்டுள்ள சங்கங்களின் எண்ணிக்கை 52 ஆகும்.

## 4.1 கணக்காய்வு நடவடிக்கைகள்.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள நியதிச்சட்ட அலுவல்களுக்குரியதான பிரதான பணியாக கணக்காய்வு நடவடிக்கைகளைக் குறிப்பிட முடியும். தலைமைக் காரியாலயத்தினால் திட்டமிடப்பட்ட கணக்காய்வு எண்ணிக்கை 41 ஆகும். இதில் 40 கணக்காய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**கணக்காய்வு, திட்டமிடல் மற்றும் முடிவடைந்துள்ள வற்றின் தகவல்கள் பின்வருமாறு**

| | மத்திய அரசு | மேல் | மத்திய | தென் | வடமேல் | ஊவா | வட மத்திய | வட கிழக்கு | சப்ரகமுவ | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலக்கிடப் பட்டவை | 41 | 2038 | 1307 | 1328 | 1559 | 1407 | 231 | 2020 | 1024 | 10955 |
| நிறைவேற்றப் பட்டவை | 40 | 1589 | 1129 | 1224 | 1446 | 765 | 223 | 1750 | 913 | 9079 |
| சதவீதம் | 97.6 | 77.9 | 86.3 | 92.1 | 92.8 | 54.4 | 96.5 | 86.6 | 89.1 | 82.8 |

கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காய்வு நடவடிக்கைகளை மேலும் சம்பிரதாயபூர்வமான நிலைமையிலிருந்து விடுவித்து நடைமுறைக் கணக்காய்வு எண்ணக்கருவினுக்குள் நிகழ்த்தவேண்டிய அவசியத் தன்மையை நன்றாக விளங்கி, இனிமேல் நவீன கணக்காய்வுகலை நடைமுறை தொடர்பாக திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் கணக்காய்வு மாதிரிகள் தயார ித்தலை ஆரம்பிக்கும் ஆரம்ப நடவடிக்கைகளை இவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு இலங்கை பட்டயக் கணக்காளர நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கணக்காய்வு கட்டளையைப் பிரயோகிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

உச்சமட்ட இரண்டாம்படி மற்றும் ஆரம்ப மட்டக் கூட்டுறவுச் சங்கங்கள் 10955 இனது கணக்காய்வு செய்து முடிக்க இலக்கிடப்பட்டுள்ளவற்றுக்கு ஈடுபடுத்தப்பட்ட பரிசோதகர்களின் எண்ணிக்கை 600 ஆகும். கணக்காய்வு நிறைவேற்றப்பட்டுள்ள எண்ணிக்கை 9079 ஆவதுடன், அது 82.8% வீதமாகும்.

## 4.2 46 (1)ன் கீழான விசாரனைகள்

கூட்டுற்வுச் சங்கங்களின் நிதி நிலைமை, நிர்வா்கம் மற்றும் செயற்பாடு தொடர்பாக விசாரனை நடாத்தும் உரிமை கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் 46 (1) பிரிவின் படி, கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அப்பணி மாகாண ஆணையாளர்களக்கும் உரிய சட்ட நுல்களிலுள்ளவாறு அவ்வதிகாரம் உரித்தடையதாகும். மத்திய அரசின் ஆணை யாளரின் நிருவாகத்தின் கீழ் நடைமுறையிலுள்ள இரண்டு

சங்கங்களின் விசாரனைகள் நடாத்தப்பட்டுள்ளது. மாகாண ஆணையாளர்களின கீழ் நடாத்தப்பட்டுள்ள விசாரனைகளின் எண்ணிக்கை 192 ஆகும். இவ் அட்டவனை கீழே காட்டப்பட்டுள்ளது.

| | மத்திய மாகாணம் | மேல் மாகாணம் | தென் மாகாணம் | வடமேல் மாகாணம் | ஊவா மாகாணம் | வ/ம மாகாணம் | வ/கீ மாகாணம் | சப்ரகமுவ மாகாணம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சமர்ப்பிக் கப்பட்டவை | 94 | 1 | 22 | 66 | 1 | - | - | 1 | 185 |
| நிறைவேற் றப்பட்டது | 54 | 1 | 12 | 66 | 1 | - | - | 1 | 135 |

இவ்வாறான விசாரனைகளை நடாத்துவதின் பாரதூரமான பணிகள் மற்றும் பொறுப்புக் கூறவேண்டிய பணியாகக் கருதப்பட வேண்டியதுடன், அதற்காக ஈடுபடுத்த உள்ள உத்தியோகத்தர கள் குறைபாடு பெரிதும் பாதித்துள்ளது.

## 4.3 பிணக்குகளைத் தீர்த்தல்

கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் மற்றும் அங்கத்த வர்களுக்கிடையே ஏற்படும் பிணக்குகளை, பல பிணக்குகள் தீர்க்கும் சட்டரீதியான பொறுப்புகள் சட்டத்தின் 58 வது பிரிவுக்கேற்ப, ஆணையாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அநியாயமான செயல்கள் தவிர, ஏனைய பிணக்குகள் இவ்வாறு ஆணையாளர்களினால் நியமிக்கப்படுகின்ற தீர்ப்பாளர்கள் அக்குறிப்பிட்ட பிணக்குகளை மத்தியஸ்தப்படுத்தி, தீர்ப்புகளை வழங்குவதும், மேலதிக முயற்சிகளை ஏடுப்பதன் பொறுப்புக்களும் அவ் ஆணையாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிரதான காரியாலயத்தினால் நீதிமன்றங்களுக்கு விடப்பட்டுள்ள இக் குறிப்பிட்ட பிணக்குகளுக்கு 1.2 மிலியன் ரூபா கிடைத்துள்ளதுடன் அத்தொகையில் 0.9 மிலியன் ரூபா மறுபடி சங்கங்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது

பிணக்குகளை விசாரித்தலும் மற்றும் நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டுள்ளவற்றினதும் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது

| | மத்திய அரசு | மேல் மாகாணம் | மத்திய | தென் | வட மேல் | ஊவா | வட மத்திய | வட கிழக்கு | சப்ரகமுவ | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கிடைக்கப் பெற்ற பிணக்கு | 94 | 6372 | 1932 | 2570 | 2250 | 1432 | 760 | 209 | 2256 | 17880 |
| தீர்ப்புக்கென வி.பிண | 54 | 6326 | 1925 | 2429 | 2250 | 1031 | 747 | 203 | 2063 | 17028 |
| தீர்.பிண | 29 | 5291 | 1925 | 2184 | 2101 | 977 | 510 | 117 | 1928 | 15062 |
| நீதி.ம.வி.பி | 32 | 4085 | 857 | 1017 | 2000 | 508 | 210 | 209 | 1630 | 10548 |

## 4.4 கூட்டுறவுச் சங்கங்களின் பதிவை ஒழிப்புச் செய்தல்

இவ் வருடத்தில் பதிவழிப்புச் செய் தகூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 236 ஆகும். கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் 50 (அ) மற்றும் (ஆ) பிரிவுன் கீழ் பல வருடகாலமாக நட்டத்தில் இயங்கி வந்தமையால், பல வருடகாலமாக செயல்படாத தன்மைக்குள்ளாக்கப்பட்டு இயங்க முடியாமலிருந்த சந்தர்ப்பங்களில் தனிப்பட்ட அங்கத்துவம் வகிக்கும் சங்க மொன்றின் அங்கத்துவ எண்ணிக்கை 10க்கு குறைந்தசந்தர்ப்பத்தில் ஏதாவது ஒரு சங்கம், இனிமேலும் இயங்கிச் செல்ல முடியாதென ஆணையாளரினால் முடிவெடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் தமது அதிகாரங்களுக்கேற்ப விசாரனையின் பின்னர், பதிவை அழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இக்குறிப்பிட்ட சங்கங்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைக் காப்பாற்றி சங்கத்தை மூடிவிடுவதற்கு ஒழிப்பாளர்கள் நியமிக்கப்படுவர்.

**பதிவு இரத்துச் செய்யப்பட்டதும் மற்றும் ஒழிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதும் கீழே காட்டப்பட்டுள்ளது.**

| | மத்திய | மேல் | தென் | வடமேல் | வ/ம | சப்ரகமுவ | ஊவா | மத்திய | வ/கி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதிவு இரத்து செய்யப்பட்டது | - | 46 | 39 | 29 | 56 | 2 | 10 | 54 | - | 236 |
| ஒ.செ.கொ | - | 134 | 94 | 85 | 30 | 68 | 10 | 143 | - | 564 |
| முடிக்கப் பட்டுள்ளவை | - | 21 | 16 | 28 | 7 | 2 | 5 | - | 19 | 98 |

## 4.5 கூட்டுறவு சிராமிய வங்கி


கிராம மக்களின் பொருளாதார மற்றும் சமூக நிலைமையை மேம்படுத்துவதற்கான நோக்கில், கிராம மற்றும் நகரப்புற மக்களின் சேமிப்பை விருத்தி செய்வதினூடாக முதலீட்டை ஊக்குவிக்கும் பணியை, கிராமிய வங்கியை அடிப்படை யாகவைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் செயல்படுகிற து. மாகாண ஆணையாளர்களின் மேற்பார்வையின் கீழ் நிர வகிக்கப்படும், இவ்வங்கி அமைப்பு, கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டலின் அடிப்படையில் செயல்படுகின்றது.

பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் 300 இனதும் விசேட சங்கங்கள் 6 இனது கிளைகளாகவும், கிராமிய வங்கி 1476 தீவு முழுவதிலும் செயல்படுகின்றது. கிராமிய வங்கி இந்நாட்டில் ஆரம்பமிக்கப்பட்டு 36 வருடங்களாக இருந்தும் விசேடமாக கிராமிய மக்கள் அது சம்பந்தமாகக் காட்டும், ஆர்வமும் மற றும் கவனமான முறையும் வளர்ச்சியடைந்து கூட்டுறவு முறை யின் பால் மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் முன்மாதிர ியெனக் காட்டுவது சரியானதாகும்.

